X:322.2
N56
68274

# லச்சீர்திருத்தம் பற்றிய சிபாரிசுகள்




11 AUG 1958
MADRAS
322.211 N58
N56.
682748

செப்பனிடுபவர் பெயர்

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நாள்

செப்பனிட்டு முடிந்த நாள்

சரிபார்க்கும் முதல்வர் கையொப்பம்

ஆராய்ச்சி உதவியாளர் கையொப்பம்

# நிலச் சீர்திருத்தம்பற்றிய சிபாரிசுகள்

## நிலச் சீர்திருத்தக் குழுவின் சிபாரிசுகள்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்
31/79, செம்புதாஸ் தெரு,
சென்னை-1.

முதல் பதிப்பு: ஜூலை, 1956.

## அட்டைப்பட விளக்கம்

" மூத்து நரை முதிர்ந்த விவசாயப் பெருங்குடி மகன் முதலாக வருங்காலத்தை எதிர்நோக்கி நிற்கும் இளம் தளிர்கள் வரை நிலச் சீர்திருத்தம் கோரி கிளர்ச்சியும் ஊர்வலமும் நடத்திய காட்சிகளில் ஒன்று.

68274

விலை அணா 0—3—0.

ஜனசக்தி பிரஸ், 32, பிராட்வே, சென்னை-1.

# முகவுரை

—O—

பாடுபட்டு உழைக்கும் விவசாயி, நிலத்தின் சொந்தக்காரனாக வேண்டும். அவன் இடுப்பை இன்று ஒடித்துக்கொண்டிருக்கும் வார, குத்தகைப் பளுவிலிருந்து அவன் விடுவிக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் நாட்டில் விவசாய வளர்ச்சி ஏற்படும்; விவசாயிகளின் வாழ்க்கை நிலை உயரமுடியும்; அவர்களின் வாங்கும் சக்தி பெருகும். இது இன்று சகல ஜனநாயகக் கட்சிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள உண்மை.

நமது நாடு தொழில் வளர்ச்சி யடைவதற்கு இன்றியமையாத தேவைகளுள் ஒன்று விரிவான உள்நாட்டுச் சந்தை. இச்சந்தையை உருவாக்கவேண்டுமாயின் விவசாயியின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும்; அவன் வாழ்வு வளமடையவேண்டும். சகல நேர்மையாளர்களும் இதை அங்கீகரிக்கின்றனர்.

எனவே நாட்டு நலனில், வளர்ச்சியில் ஆர்வம் கொண்டவர் அனைவரும் விவசாய மக்களின் இன்னலைத் தீர்க்க முன்வரவேண்டும். உழுபவனுக்கு நிலத்தைக் கொடுத்து, வார, குத்தகைப் பளுவைக் குறைத்து, அவன் வாங்கும் சக்தியை உயர்த்த முன்வர வேண்டும். இவற்றிற்கான பரிபூரண நிலச் சீர்திருத்தம் கொண்டு வரச் செய்யவேண்டும். சகல தேசபக்தர்களின் கடமை இது.

எனவே அவர்கள் முன் இச்சிறு பிரசுரத்தை வைக்கிறோம். திட்டக் கமிஷனால் நியமிக்கப்பட்ட நிலச்சீர்திருத்தப் பரிசீலனைக் குழு நிலச் சீர்திருத்தங்கள் பற்றிச் சமர்ப்பித்த பிரதான சிபாரிசுகள் இதில் அடங்கியுள்ளன. வார, குத்தகை பற்றியும், நில உடைமைக்கு உயர்ந்தபட்ச வரம்பு கட்டுவதுபற்றியும், விவசாயப் புனரமைப்பு பற்றியும் கொடுக்கப்பட்டுள்ள சிபாரிசுகள் இவை.

இவைகளெல்லாம் அகில இந்திய கிஸான் சபாவின் தலைமையின் கீழுள்ள விவசாய இயக்கம் கோரிவந்த கோரிக்கைகளைவிட குறைந்தபட்சத் தன்மையுள்ளவை. ஆனால் இதுகாறும் திட்டமிடப்பட்டு வந்துள்ள சீர்திருத்தங்களை விட இவை மிகத் தீவிரமானவை என்பதில் ஐயமில்லை. இவை அமுலாக்கப்பட்டால், பெரிதும் பலனுள்ள விளைவுகள் ஏற்படும்.

இன்று குறிப்பிடப்பட வேண்டிய மற்றொரு விஷயமும் உண்டு. இச்சிபாரிசுகளைச் செய்துள்ள குழுவிலே, அகில இந்தியக் காங்கிரஸின் செயலாளர் திரு. ஸ்ரீமன் நாராயணனும், அகில இந்திய பிரஜா சோஷலிஸ்ட் தலைவர்களுள் ஒருவரான திரு. அசோக் மேத்தாவும், அகில இந்தியக் கிஸான் சபாவின் பொதுச்செயலாளர் திரு. பிரசாத ராவும் அங்கம் வகித்துள்ளனர். எனவே இச்சிபாரிசுகளுக்கு நமது நாட்டிலுள்ள பெரிய ஜனநாயக ஸ்தாபனங்களின் ஆதரவு உண்டு.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக திட்டக் கமிஷனும், இந்திய அரசாங்கமும் இக்குழுவின் மிக முக்கியமான சிபாரிசுகளை ஏற்றுக் கொள்ளவில்லை.

இன்று இச்சிறு நூல் எழுப்பியுள்ள பிரச்னைகள் அனைத்தையும் நாம் தமிழகத்தில் எதிர்நோக்கியுள்ளோம். அவற்றைத் தீர்ப்பதற்கு இப்பரிசீலனைக் குழு முன் வைத்துள்ள பிரேரணைகள் பெரிதும் உதவி செய்யும்.

ஆதலால், இந்தப் பிரேரணைகளை அரசாங்கம் உடனடியாக ஏற்றுக்கொண்டு, அமுல் நடத்துமாறு அரசாங்கத்தை, நாட்டு நலனில் அக்கறை கொண்டோர் அனைவரும் நிர்ப்பந்திக்க வேண்டியது அவசியமாகும். இத்தகைய ஒரு இயக்கத்தைத் திரட்டி, உருவாக்க ஒவ்வொரு விவசாய சங்க ஊழியரும் இந்நூலைப் படித்து, இதில் உள்ள விஷயங்களை மிக விரிவாகப் பிரச்சாரம் செய்யவேண்டியது உடனடி வேலையாகும். ஒவ்வொரு விவசாய சங்க ஊழியர் கையிலும் அவசியம் இருக்கவேண்டிய பிரசுரம் இது.

சென்னை
25—6—56

பி. ஸ்ரீனிவாச ராவ்,
பொதுச்செயலாளர், தமிழ்நாடு விவசாய சங்கம்.

# வாரம், குத்தகைபற்றிய பரிசீலனைக் குழுவின் முடிவுகளும், சிபாரிசுகளும்

## இடைத்தட்டுக்காரர்கள் ஒழிப்பு

1. இடைத்தட்டுக்காரர்கள் ஒழிப்பானது நாட்டின் பெரும் பகுதியில் நிறைவேற்றப்பட்டுள்ளது. சில சிறிய பிராந்தியங்களில்தான் இதற்கான சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியிருக்கிறது. இதையும் மிக விரைவில் பூர்த்தி செய்துவிடவேண்டியது அவசியமாகும்.

2. இனாம்களும் இடைத்தட்டுக் குத்தகைகள்தான்; எனவே அவற்றையும் மிகத் துரிதமாக ஒழுங்குபடுத்த வேண்டும்.

3. இடைத்தட்டுக்காரர்களை ஒழித்ததன் விளைவாகத் தோன்றியுள்ள சில பிரதான கடமைகள் பின்வருமாறு:

(அ) நிலத்தின் விஸ்தீரணம், மதிப்பு, சொந்தக்காரர்கள் ஆகியவற்றைப்பற்றிய கணக்கெடுத்து, தஸ்தாவேஜு தயாரிப்பது;

(ஆ) ரெவின்யூ நிர்வாகத்தைப் பலப்படுத்தி, நில விவர தஸ்தாவேஜுகள் மிகப் புதிய மாற்றங்களையும் காண்பிக்கக் கூடியதாக வைத்திருக்கச் செய்வது;

(இ) நில வரி வசூலுக்குச் சரியான ஒரு நிர்வாக அமைப்பை ஏற்படுத்துவது;

(ஈ) அரசாங்கம் எடுத்துக்கொண்டுள்ள பொது நிலங்களை நிர்வகிப்பதற்கு ஒரு நிர்வாக அமைப்பை ஏற்படுத்துவது.

சமீப ஆண்டுகளில் இந்தத் திசை வழியிலே பல காரியங்கள் செய்யப்பட்டுள்ளன. எனினும் பெருமளவிற்கு அது இனிமேல்தான் பூர்த்தி செய்யப்படவேண்டும். நிலச்சீர்திருத்த நடவடிக்கைகளைப் பயனுள்ள முறையில் அமுல் நடத்துவது, பெரும்பாலும் மேற்கூறிய நடவடிக்கைகளைத் துரிதமாகப் பூர்த்தி செய்வதைப் பொறுத்திருக்

கிறது; அதிலும் குறிப்பாக, சிறந்ததோர் ரெவினியூ நிர்வாகத்தை உருவாக்கி, நில விவரத் தஸ்தாவேஜுகளைத் தயாரிப்பதைப் பொறுத்திருக்கிறது.

4. நஷ்டஈடு கொடுப்பதைத் துரிதமாகக் கொடுத்துவிடவேண்டும்; குறிப்பாக, சிறிய இடைத்தட்டுக்காரர்களுக்கும், விதவைகளாகவும், மைனர்களாகவும் உள்ள இடைத்தட்டுக்காரர்களுக்கும் அது துரிதமாகக் கொடுக்கப்படவேண்டும். ஒரு இடைத்தட்டுக்காரருக்குக் கொடுக்கப்படவேண்டிய உயர்ந்தபட்ச நஷ்டஈட்டுப் பணத்திற்கு ஒரு வரம்பு நிர்ணயிக்க வேண்டும் என்ற ஒரு யோசனை கூறப்பட்டது. இந்த யோசனையைக் கவனமாகப் பரிசீலிக்கவேண்டும்; சட்டபூர்வமான தடைகள் எதுவுமில்லாவிடில் இந்த யோசனையை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும்.

## நிலச்சொந்தக்காரர்களின் உரிமைகள்

5. இடைத்தட்டுக்காரர்களை ஒழித்த பின்பும்கூட, பல இராஜ்யங்களில் பல்வேறுவிதமான குத்தகை முறைகள் நிலவிவருகின்றன; எனவே ஒரு சாதாரணமான, ஒருமுகப்படுத்தப்பட்ட குத்தகை முறையை உருவாக்கவேண்டியது அவசியமாகும். விவசாயியின் உரிமைகளையும் கடமைகளையும் திட்டவட்டமாக நிர்ணயிப்பது விவசாய வளர்ச்சிக்கு வேண்டிய ஒரு ஆரம்பத் தேவையாகும். இந்த நோக்கத்தோடுதான், விவசாயிகளுக்குக் கீழ்க்கண்ட உரிமைகளும், கடமைகளும் இருக்கவேண்டுமென சிபாரிசு செய்யப்படுகிறது:

(i) நிலமாற்ற உரிமை விவசாயிக்கு இருக்கவேண்டும்; ஆனால் கீழ்க்கண்ட உத்தரவாதங்களைப் பெறுவதற்காக, நிலமாற்றமானது கிராமப் பஞ்சாயத்துக்கள் மூலம் செய்யப்பட வேண்டும்.

(அ) நிலம் சிலர் கையிலே மட்டும் சேர்வதைத் தடுப்பதற்காக; அதாவது எதிர் காலத்தில் நிலம் வாங்குவதற்கு வரம்புகட்டுவதற்காக;

(ஆ) நிலம் துண்டு துக்காணிகளாவதைத் தடுக்க;

(இ) படிப்படியாக சமமான நிலவிநியோகத்தைக் கொண்டு வரும் நோக்கத்தோடு, நிலமாற்றங்களை ஒழுங்குபடுத்துவதற்காக;

(ஈ) சமூக நலன்களை அடிப்படையாகக் கொண்டு, நில உடைமையில் ஏகபோகப் பிடிப்பின் விளைவுகளை அகற்றும் நோக்கத்தோடு, நிலத்தின் விலையை ஒரு ஒழுங்குக்குக் கொண்டு வருவதற்காக.



(ii) அவர் உரிமைகள் வம்ச பரம்பரையாக இருக்கக்கூடியதாக்கப்படவேண்டும். மற்ற சொத்துக்களுக்குள்ள பிதுரார்ஜித உரிமைகளுக்கான கோட்பாடுகளே நிலத்திற்கும் இருக்கவேண்டும். ஆனால் சமூக முழுவதின் நலனுக்காக, நிலம் சிதறுண்டுபோவதைத் தடுப்பதுபோன்ற கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாகத்தான் இந்த உரிமைகள் இருக்கவேண்டும். நிலத்தைத் துண்டு துக்காணியாக்கக்கூடிய, அல்லது ஏற்கனவே மிகச்சிறிய அளவானதாக உள்ள நிலத்தை மேலும் பங்குபோடக்கூடிய பாகப் பிரிவினைகளைத் தடைசெய்யவேண்டும். இத்தகைய நிலைமைகளில், ஒரு நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு யாராவது ஒரு பங்காளிக்கு இதர பங்குகள் விற்கப்படவேண்டும். இந்தப் பங்குகளை வாங்காத பங்காளிகளுக்கு, அவரவர்களின் பங்குகளுக்கு நஷ்டஈடு கொடுக்கப்படவேண்டும். கிராமப் பஞ்சாயத்துகள் ரெவினியூ அங்கமாக இருப்பதோடு மட்டுமின்றி, மேற்கூறிய விதிகளை மீறுபவர்களைப்பற்றிய தகவலும் கொடுக்கவேண்டும்.

(iii) நிலத்திற்கு அபிவிருத்திகள் செய்வதற்கு விவசாயிக்குத் தங்குதடையற்ற உரிமை வேண்டும்.

(iv) நிலத்தை சாதாரண அடமானம் வைக்கும் உரிமை விவசாயிக்கு இருக்கவேண்டும். ஆனால் நில பாத்தியதையே கொடுத்துவிடக்கூடிய அடமானமானது குத்தகைபற்றிய விதிகளை மீறுவதற்கான சாதனமாக உபயோகிக்கப்படுமாதலால் அதை அனுமதிக்கக்கூடாது.

(v) நிலத்தைக் குத்தகைக்கு விடுவதைத் தடுப்பது என்பது நடைமுறைக்கு உகந்ததல்ல; விரும்பத்தக்க ஒரு யோசனையும் அல்ல. எனினும், இதிலுள்ள கேடுகளைத் தடுத்தாகவேண்டும். அதற்காக, நிர்ணயிக்கப்பட்ட விதிகளுக்கு உட்பட்டு மூன்று முதல் ஐந்து வருடங்களுக்கு மேற்போகாத ஒரு காலகட்டத்திற்கு கிராம நிர்வாகக் குழுக்கள்மூலம் குத்தகைக்கு விடுவது அனுமதிக்கப்படலாம்.

(vi) திறமையான சாகுபடி செய்வதற்குத் தேவையான உத்திரவாதங்களுக்கு உட்பட்டு, நிலத்தை சகலவிதமான விவசாய வேலைகளுக்கும் பயன்படுத்துவதற்கு விவசாயிக்கு உரிமை இருக்கவேண்டும். சமூகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றபின்பே விவசாய மற்ற இதர காரியங்களுக்கு நிலத்தை உபயோகிப்பது அனுமதிக்கப்படவேண்டும்.

(vii) நிலவரி செலுத்தாததற்காக நிலத்தைவிட்டு விவசாயியை வெளியேற்றக்கூடாது. அறுவடையையோ அல்லது இதர ஜங்கம

சொத்துக்களையோ விற்பதின்மூலமாகக் கிடைக்கும் தொகையானது கொடுக்கப்படவேண்டிய வரிப் பாக்கிக்குப் போதுமானதாக இல்லாவிடில் அவன் நிலத்தில் ஒரு பகுதியை விற்று அந்த பாக்கியை எடுத்துக் கொள்ளலாம். பாக்கி செலுத்தாததற்காகக் காவலில் வைப்பதோ, கைது செய்வதோ கைவிடப்படவேண்டும்.

6. தரிசு நிலங்களை விவசாய நோக்கங்களுக்காக கொடுக்கும் பொழுது (அ) கிராமப்புறங்களிலும் (ஆ) நகரப்புறங்களிலும் கீழ்க்கண்ட கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கவேண்டும்.

(அ) உயர்ந்தபட்சத் தொகையை கொடுக்க முன்வருகிறவர்களுக்கு ஏலத்தில் தரிசு நிலத்தைக் கொடுப்பது என்ற முறையானது விரும்பத்தக்க முறையல்ல; எனவே நிலத்தை ஏலத்திற்கு விடக்கூடாது. ஆனால் தரிசை ஒருவருக்குக் கொடுத்து, அதன் எல்லையை நிர்ணயிப்பதற்காக ஆகும் செலவிற்கு ஒரு குறிப்பிட்ட தொகையை வசூலிக்கலாம். நில மாற்றத்தின்பொழுது கடைப்பிடிக்கக்கூடிய அதே முறையில் தகுந்த அளவிலே நிலத்தை விவசாயிக்கு ஒதுக்கித் தரவேண்டும். ஒரேவிதமான நிலத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் மனுச்செய்துகொண்டால் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு ஒப்பந்தத்தைக் கொண்டுவர முயற்சிசெய்யவேண்டும். ஒப்பந்தம் ஏற்படாவிடில் சீட்டுப்போட்டு முடிவுசெய்யவேண்டும்.

(ஆ) நிபந்தனைகளையும், விதிகளையும் பொறுத்தவரை, நிலத்தைப் பெறுபவர் ஐந்தாண்டுகளுக்குள் நிலத்தை சாகுபடிக்குக் கொண்டுவரும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். நிலம் கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து பத்து வருட காலத்திற்கு நிலத்தைக் குத்தகைக்குவிடவோ அல்லது வேறு யாருக்காவது மாற்றுவதற்கோ அந்த விவசாயிக்கு உரிமை இருக்கக்கூடாது. ஆனால் ராஜ்ய அரசாங்கத்தினிடமிருந்தோ கூட்டுறவு சங்கங்களிடமிருந்தோ கடன் வாங்குவதற்கு நிலத்தை ஈடாகக் கொடுக்கும் உரிமை விவசாயிக்கு இருக்கவேண்டும்.

(இ) நகரப் புறங்களிலும் விவசாய நோக்கங்களுக்காக தரிசு நிலத்தைக் கொடுக்கும் காலத்தில் மேற்கூறிய நிபந்தனைகளையே கடைப்பிடிக்கவேண்டும்; ஆனால் விவசாய சம்பந்தமற்ற இதர காரியங்களுக்கு நிலத்தை உபயோகிப்பதற்கு உரிமை இருக்கக்கூடாது. நகரப்புறங்களிலே இருக்



கக்கூடிய பொருளாதார நிலைமைகளுக்கு உகந்தபடி உயர்ந்தபட்சத் தீர்வையை விதிப்பதற்கும் முயற்சி செய்யலாம்.

## வார, குத்தகைச் சீர்திருத்தங்கள்

“தாங்களாகவே திருப்பிக் கொடுப்பது” என்ற பெயரால் சமீப வருடங்களில் பெருமளவிற்கு நில வெளியேற்றம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக நிலச்சுவான்தார்—வார, குத்தகைதார் உறவை ஒழுங்குபடுத்த எடுக்கப்பட்ட முயற்சிகளெல்லாம் பொதுவாகத் தோல்வியுற்று இருக்கின்றன; இத்தகைய உறவு உடனடியாக அகற்றப்படவேண்டியது அவசியமாகும்; நிலச்சுவான்தாருக்கும் குத்தகைதாருக்குமிடையே அரசாங்கமானது குறுக்கிடவேண்டும். இந்தத் திசைவழியில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படவேண்டும்:

(i) வார, குத்தகைதார்களை வெளியேற்றுவது நிறுத்தப்பட வேண்டும். நிலச்சுவான்தாருக்கு வாரம் அல்லது குத்தகை கொடுக்கவில்லை அல்லது நிலம் தவறான வழியில் பயன்படுத்தப்பட்டது என்ற காரணங்களுக்காக சட்டபூர்வமான வழிகளிலே நில வெளியேற்றம் செய்வது அனுமதிக்கப்படலாம்.

(ii) நிலச்சுவான்தார்களுக்கு வாரம் அல்லது குத்தகை கொடுக்காததற்காகவோ அல்லது நிலத்தைத் தவறான வழியில் உபயோகித்ததற்காகவோ நீதி மன்றங்கள் மூலம் நில வெளியேற்றம் செய்யப்பட்ட சம்பவங்களைத் தவிர, சமீப வருடங்களில் நிலத்தைவிட்டு வெளியேற்றப்பட்ட இதர வார, குத்தகைதார்களுக்கு அந்த நிலங்கள் திருப்பிக் கொடுக்கப்படவேண்டும். “தாங்களாகவே திருப்பிக் கொடுப்பது” என்பது பிரதானமாக நிலச்சுவான்தார்களுக்கு இருக்கும் செல்வாக்கினாலும், வார, குத்தகைதார்களுக்கு பேரம் பேசும் சக்தி மிகக் குறைவாக இருப்பதினாலும்தான் ஏற்படுகிறது. இவ்விதம் திருப்பிக் கொடுக்கப்பட்ட சம்பவங்களெல்லாம் நில வெளியேற்றங்களாகவே கருதப்பட்டு அவர்கள் நிலத்தைத் திருப்பிப்பெற வசதி செய்யவேண்டும்.

(iii) எல்லா வார, குத்தகைதார்களும் அரசாங்கத்துடன் நேரடியான உறவு ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்; அரசாங்கம் இவர்களிடமிருந்து நியாயமான வார, குத்தகைப் பங்கை வசூல் செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும்; அரசாங்கமே அந்த வார, குத்தகைப் பங்கை, வசூல் செலவைக் கழித்துக்கொண்டு, நிலச்சுவான்தார்களுக்குக் கொடுக்கவேண்டும்.

2. வார, குத்தகை சீர்திருத்தச் சட்டமானது கீழ்க்கண்ட கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும் :

(i) ஒரே நிலச்சுவான்தாரிடமிருந்து ஒரு நிலத்தைத் தொடர்ந்து 12 வருட காலத்திற்குப் பயிர் செய்துவந்த ஒரு வார, குத்தகைதாரருக்கு அந்த நிலம் பிதுரார்ஜித உரிமைகளுடன் நிரந்தரமாகக் கொடுக்கப்படவேண்டும் ; அந்த நிலம் நிலச்சுவான்தார் சொந்த சாகுபடிக்குத் தேவையாயிருக்கிறது என்ற காரணத்தினால் வார, குத்தகைதாரரை நிலவெளியேற்றம் செய்யக்கூடாது.

(ii) பனிரெண்டு வருடங்களுக்குத் தொடர்ந்து ஒரு நிலத்தை சாகுபடி செய்யாத வார, குத்தகைதாரர்களுக்கு, உரிய பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும் ; ஆனால் சில நிபந்தனைகளுக்குட்பட்டு நிலச்சுவான்தார்கள் அந்நிலத்தைச் சொந்த சாகுபடிக்குத் திரும்பப் பெற்றுக்கொள்ளும் உரிமை இருக்கவேண்டும். அந்நிபந்தனைகளாவன :

(அ) வார, குத்தகைதாரருக்குச் சொந்த சாகுபடிக்குத் தேவையான அளவை வைத்துக்கொள்ளும் முதல் உரிமை இருக்க வேண்டும் ; அதாவது தன் உழைப்பினாலும், தன் குடும்பத்தினரின் உழைப்பினாலும் சாகுபடி செய்யக்கூடிய அளவு நிலம் அவருக்கு அளிக்கப்படவேண்டும். அவர் வைத்துக் கொள்ளும் நிலத்தின் அளவு ஒரு குடும்ப நிலத்தின் அளவும், அவர் குடும்பத்திலுள்ள வேலை செய்யும் வயது வந்த ஒவ்வொரு ஆளுக்கும் அரைக்குடும்பத்தின் அளவும் சேர்ந்து வரக்கூடிய மொத்த விஸ்தீரணமாக இருக்கவேண்டும்.

(ஆ) மேற்கூறிய அளவுக்கு அதிகமாக அவர் வைத்துக்கொண்டிருக்கும் நிலத்தை, நிலச்சுவான்தார் சொந்த சாகுபடிக்காகத் திருப்பவும் பெற்றுக்கொள்ளலாம். அப்படிப் பெற்றுக்கொண்ட நிலத்தின் அளவு ஒரு குடும்ப அளவுக்குமேல் போகக்கூடாது.

(இ) வார, குத்தகைதாரர் பயிரிடவோ, நிலச்சுவான்தார் சொந்த சாகுபடி செய்யவோ உரிமை இல்லாமலிருக்கும் நிலமானது, மிஞ்சிய நிலம் என அறிவிக்கப்பட வேண்டும்.

2. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலைமைகளில் மேற்குறிப்பிட்டுள்ள விதிக்கு விலக்களிக்கப்படலாம் :

(i) **சிறிய நிலச்சுவான்தார்கள்** : சிறிய நிலச்சுவான்களின் உரிமைகளும், அவர்களின் வார, குத்தகைதாரர்களின் உரிமைகளும் மிகக்



கவனமாக எடை போடப்படவேண்டியது சமூக நலன்களுக்கு அவசியமாகும். ஒரு எக்கனாமிக் யூனிட்டுக்கும் குறைவாக நிலம் வைத்திருப்பவர், சிறிய நிலச்சுவான்தார் என வரையறுக்கலாம். (அவர் ஏற்கனவே குத்தகைக்கு விடாமல் சொந்தத்தில் வைத்துக்கொண்டுள்ள நிலம் உட்பட) அவருக்குச் சொந்தமான நிலத்தில் பாதியை சொந்த விவசாயம் செய்ய அவர் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் ; ஆனால், நிலம் சிதறுண்டு போவது, பங்கு போடப்படுவது பற்றிய சட்டம், லாபகரமான சாகுபடிக்குத் தேவையான அளவு என்று நிர்ணயிக்கக்கூடிய அளவுக்குக் குறைவானதாக, அவர் பெறும் நிலத்தின் அளவு இருக்கக் கூடாது. இவ்விதம் வார, குத்தகைதாரரிடமிருந்து இந்தச் சிறிய நிலச்சுவான்தார் நிலத்தைத் திரும்பப் பெற்றுவிடுவதனால், அந்த வார, குத்தகைதாரரிடமுள்ள நிலம், குறைந்தபட்ச விஸ்தீரணத்திற்குக் குறைவானதாகிவிடும் ; எனவே இவ்விதம் அச்சிறிய நிலச்சுவான்தார் நிலத்தைத் திரும்பப்பெறுவதை அனுமதிக்கு முன்பு, மிஞ்சிய நிலமென அறிவிக்கப்பட்டுள்ளதிலிருந்து, அவ்வார, குத்தகைதாரருக்குக் குறைந்தபட்ச அளவுக்குத் தேவையான நிலத்தைக் கொடுக்கவேண்டும்.

(ii) **ஏதாவது ஒரு கோளாறினால் கஷ்டப்படும் நபர்கள்** : ஏதாவது ஒரு கோளாறினால் கஷ்டப்படும் ஒருவர், அக்கஷ்டத்தின் காரணமாகவே தன் நிலத்தை வாரத்திற்கோ அல்லது குத்தகைக்கோ விடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தால், அப்படிப்பட்டவர் தன்னுடைய சொந்த உழைப்போடும் தன் குடும்பத்தின் இதர உறுப்பினர்களுடைய உழைப்போடும் சாகுபடி செய்யக்கூடிய அளவு நிலத்தைச் சொந்த சாகுபடிக்குத் திரும்பப்பெற்றுக்கொள்வதற்கு முதல் உரிமை இருக்க வேண்டும். இதைத் தீர்மானிப்பதற்காக, கீழே கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய வகையைச் சேர்ந்த நபர்கள் ஏதாவதொரு கோளாறினால் கஷ்டப்படுவதாக அனுமானித்துக் கொள்ளலாம் :

(அ) விவாகமாகாத ஸ்திரீகள் ;

(ஆ) விதவைகள் ;

(இ) மைனர்கள் ;

(ஈ) உடல் கோளாறினாலோ, மூளைக்கோளாறினாலோ கஷ்டப்படுபவர்கள் ;

(உ) இராணுவத்தில் சேவை செய்கிறவர்கள்.

அத்தகைய குடும்பத்தில் வயதுவந்த, சாகுபடி வேலையிலீடுபடும் திராணியுள்ள ஒரு உழைப்பாளி இருந்தால் அவர் எந்தக் கோளாறினாலும் கஷ்டப்படுவதாக அனுமானிக்கக்கூடாது.

இவ்விதம் ஏதாவதொரு கோளாறினால் கஷ்டப்படுபவர், தன் நிலத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்வதனால், அந்நிலக் குத்தகைக் காரருக்குக் குறைந்தபட்ச அளவு நிலமும் இல்லாமல் போகலாம்; அந்நிலையில், மிஞ்சி இருப்பதாக அறிவிக்கப்பட்ட நிலத்திலிருந்து, முதல் சலுகை கொடுத்து, அந்தக் குறைந்தபட்ச அளவைச் சரிக்கட்டத் தேவையான அளவுள்ள நிலத்தை அந்த வார, குத்தகைதாரருக்கு ஒதுக்கிக் கொடுக்கவேண்டும்.

4. நிலையற்ற தன்மையைப் போக்கி, வார, குத்தகைதாரர்களின் நிலையை ஸ்திரப்படுத்த, நிலச்சுவான்தார்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளக்கூடிய நிலத்தையும், வார, குத்தகைதாரர்கள் வைத்துக் கொள்ளக்கூடிய நிலத்தையும், மிகக் குறுகிய காலத்திற்குள், அதாவது ஆறு மாத காலத்திற்குள் நிர்ணயித்தாகவேண்டும்.

திரும்பப் பெற்றுக்கொள்ளும் அளவு, திரும்பப் பெற்றுக் கொள்ள முடியாத அளவு ஆகியவற்றைப் பற்றித் தீர்மானிக்கும் பொழுது, தான் வைத்துக்கொள்வதற்கு உரிமை பெற்றுள்ள அளவுக்கு வேண்டிய நிலத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு, வார, குத்தகைதாரருக்கு உரிமை இருக்கவேண்டும். கீழ்க்கண்ட வரிசை முறையில் வார, குத்தகைதார் நிலத்தைத் தேர்ந்தெடுக்கவேண்டும் :

(அ) அவருக்குச் சொந்தமான நிலம் ஏதாவது இருந்து, அதை அவர் வைத்துக்கொள்ளும் உரிமை அவருக்கிருந்தால், அந்த நிலம் ;

(ஆ) அதிகப்படியான நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து வார, குத்தகைக்குப் பெற்றுள்ள நிலம் ;

(இ) மத்தியதரப் பகுதிகளிடமிருந்து வார, குத்தகைக்குப் பெற்றுள்ள நிலம் ;

(ஈ) சிறிய நிலச்சுவான்தார்களிடமிருந்து வார, குத்தகைக்குப் பெற்றுள்ள நிலம்.

அதற்குப் பின்புதான், மிஞ்சியுள்ள நிலத்திலிருந்து முன்பு கூறியுள்ள அளவு நிலத்தை நிலச்சுவான்தார் திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டும். இவை போக மீதியுள்ள நிலம் மிஞ்சிய நிலமென அறிவிக்கப்படவேண்டும்.

## திரும்பப் பெற்றுக்கொள்ள முடியாத பகுதிகளில் வார, குத்தகைதாரர்களுக்குள்ள உரிமைகள்

5. நிலச்சுவான்தார்கள் திரும்பப்பெற்றுக்கொள்ள முடியாத பகுதிகளில், வார, குத்தகை விவசாயிகளுக்கு சாஸ்வத, பரம்பரை



உரிமை அளிக்கப்படவேண்டும். முந்திய பகுதியில் சிபாரிசு செய்யப்பட்டுள்ளபடி நிலச் சொந்தக்காரர்களுக்குரிய உரிமைகளும், கடமைகளும் அவர்களுக்கு இருக்கவேண்டும்.

## திரும்பப் பெற்றுக்கொள்ளும் பகுதிகளில் உள்ள உரிமைகள்

6. நிலச்சுவான்தார்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளக்கூடிய பகுதிகளைப் பொறுத்தவரை, நிலச்சுவான்தார் அப்பகுதிகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும்வரை, வார, குத்தகைதாரருக்கு பரம்பரையாக வைத்துக்கொள்ளும் உரிமை உண்டு; ஆனால் சாஸ்வத உரிமை கிடையாது; நிலத்திற்கு அபிவிருத்திசெய்யும் உரிமையும் உண்டு. அரசாங்க அனுமதியுடன் அபிவிருத்திகள் செய்யப்பட்டால், வார, குத்தகைதாரருக்கு அதற்கு நஷ்டஈடு கொடுக்கப்படவேண்டும். ஆனால் அவருக்கு நிலத்தை வேறொருவருக்குக் கொடுக்கவோ, அடமானம் செய்யவோ, மாற்றவோ உரிமை இருக்கக் கூடாது.

## சொந்தச் சாகுபடி, குத்தகைதாரர் ஆகியவற்றைப்பற்றிய வரையறைகள்

7. சொந்தச் சாகுபடியின் பிரதான அம்சங்களாவன :

(அ) சாகுபடியிலுள்ள லாப நஷ்டம் : விவசாயம் செய்பவர் விவசாயத்திலுள்ள லாப நஷ்டங்களையும், விவசாயம் செய்யும்காலத்தில் ஏற்படும் கஷ்டநஷ்டங்களையும் சமாளிக்கத் தயாராயிருக்கவேண்டும்.

(ஆ) சொந்த மேற்பார்வை : பலனுள்ள சொந்த மேற்பார்வை செய்வதற்கு, நிலச்சொந்தக்காரரோ அல்லது அவரது குடும்பத்தில் ஒருவரோ அந்தக் கிராமத்திலோ அல்லது பக்கத்தில் இருக்கக்கூடிய கிராமத்திலோ பெரும் பகுதியான விவசாய காலத்திற்குத் தங்கி இருக்கவேண்டியது அவசியமாகும்.

(இ) உழைப்பு : குறைந்தபட்ச உழைப்பு, அதாவது உழவு, விதைப்பு, அறுவடை ஆகிய பிரதான விவசாய வேலைகளிலே பங்குகொள்வது சொந்த சாகுபடிக்கு வேண்டிய அவசியமான ஒரு அம்சமாகும்.

ஒரு வார, குத்தகைதாரரை வெளியேற்றிவிட்டு நிலத்தை சொந்த சாகுபடிக்கு எடுத்துக்கொள்ளும் ஒருவர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள

சொந்த சாகுபடிக்கு வேண்டிய மூன்று நிபந்தனைகளையும் பூர்த்தி செய்தாகவேண்டும். இதில் ஏதாவதொரு நிபந்தனையைப் பூர்த்தி செய்ய அவர் தவறினால் வார, குத்தகைதாரருக்கோ அல்லது அரசாங்கத்திற்கோ அந்த நிலம் போய்ச் சேரவேண்டும்.

எனினும் சொந்த சாகுபடிபற்றிய வரையறையைப் பூரணமாகப் பூர்த்திசெய்யப்படமுடியாத இடங்களிலும், ஒரு தொழிலாளி தன்னுடைய உழைப்புக்கு வேண்டிய ஊதியத்தின் பெரும்பகுதியை பணமாகவே வாங்கிக்கொள்வதினால் அவரை வார, குத்தகைக்காரராகக் கருதாத இடங்களிலும் இன்றுள்ள நிலைமைகளில் மேலே குறிப்பிட்டுள்ள நிபந்தனையைப் புகுத்துவது கடினமாக இருக்கும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், சாகுபடி வேலையில் நிலச்சொந்தக்காரரே ஈடுபட்டு குறைந்தபட்ச உழைப்பை அளிப்பாரானால் அத்தகைய ஏற்பாட்டை வாரமாகவோ அல்லது குத்தகையாகவோ கருத முடியாது. அவ்விதம் செய்யவில்லையானால் அது ஒரு வார, குத்தகையாகும். வார, குத்தகை உரிமைகளும் அங்குண்டு.

ஒரு நிலச் சொந்தக்காரர் சாகுபடியினால் வரக்கூடிய கஷ்ட நஷ்டங்கள் அனைத்தையும் சமாளித்துக்கொண்டே கிராமத்திலே தங்கியிராமலிருந்தால் அவர் கிராமத்தில் வந்து தங்கியிருப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கவேண்டும்.

எதிர்கால ஏற்பாடுகளைப் பொறுத்தவரை, மேலே குறிப்பிட்டுள்ள மூன்று நிபந்தனைகளையும் படிப்படியாக அடைவது நமது இலட்சியமாக இருந்த போதிலும் இந்தக் கட்டத்தில் குறைந்தபட்ச உழைப்பு அளிக்கப்படவேண்டுமென்பதை நாம் வற்புறுத்தவேண்டியதில்லை; ஆனால் நிலச் சொந்தக்காரர் சாகுபடியிலுள்ள கஷ்ட நஷ்டத்தை எதிர் நோக்கி, கிராமத்திலேயே தங்கியிருந்து, நேரடியாக விவசாய வேலைகளை மேற்பார்வையிட வேண்டும்.

## நியாயமான குத்தகை அல்லது வாரம்

8. இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலம் முடிவுக்குள் வாரம் குத்தகைப் பங்கானது மொத்த உற்பத்தியில் ஆறில் ஒரு பங்காக அல்லது அதற்குச் சமமான மதிப்புள்ள பணமாகக் குறைக்கப்பட வேண்டும். இந்த வார, குத்தகையை வசூல் செய்யும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருப்பதால், நிர்வாக சௌகரியத்திற்காக வாரத்தை தானியமாகக் கொடுப்பதற்குப் பதிலாக மிகக் குறுகிய காலத்திற்குள் ஒரு நிர்ணயிக்கப்பட்ட அளவு பணமாகக் கொடுக்குமாறு செய்ய வேண்டும்.



## வார, குத்தகைதாரர்களுக்கு நிலத்தை சொந்தமாக்குவது

9. ராஜ்ய அரசாங்கங்களுக்கு இருக்கக்கூடிய வசதி, வார குத்தகைப் பங்கின் அளவு, ஏற்படக்கூடிய பணச் செலவு ஆகியவற்றையெல்லாம் கணக்கிலெடுத்துக் கொண்டு நிலச்சுவான்தார்களின் நிலத்தை நஷ்டஈடு கொடுத்து வாங்கிக் கொள்ளலாம். நஷ்டஈட்டின் அளவை நிர்ணயிக்கும்பொழுது அரசாங்கத்திற்கு வரக்கூடிய நில வரியில் 20 வருட காலத்திற்கு மேற்போகாமல் ஏற்படும் மொத்த அதிகரிப்பை (அதாவது நிலவரி, வசூல் செலவு ஆகியவை போக நியாய வாரத்தின் மீதமுள்ள தொகையை) அடிப்படையாகப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாம். படிப்படியான அளவில் நஷ்டஈடு கொடுப்பது பரிசீலிக்கப்படலாம். இருபது வருட காலத்தில் திரும்பப் பெற்றுக்கொள்ளக்கூடிய சர்க்கார் பத்திர (பாண்டு) ரூபத்தில் நஷ்டஈடு கொடுக்கப்படலாம்.

ராஜ்ய அரசாங்கம் நஷ்டஈடைக் கொடுப்பதற்கு தேவையான அளவுள்ள காலம் வரைக்கும் வார குத்தகைதாரர்கள் நியாய வாரத்தைத் தொடர்ந்து செலுத்தியாகவேண்டும். இந்தக் காலம் முடிந்தவுடனே ராஜ்ய அரசாங்கம் நிலைமையைப் பரிசீலனை செய்து, அவசியப்பட்டால் நிலவரியை மட்டும் செலுத்துமாறு கோரலாம். இம்முறையின்மூலம் நிலவுடைமை உரிமையைப் பெறுவதற்கு ஏறத்தாழ இருபது ஆண்டுகள் பிடிக்குமாதலால், சட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட, நியாயமான ஒரு விலைக்கு அந்த உரிமையை தாங்களாகவே வாங்கிக்கொள்ளும் உரிமை வார, குத்தகைதாரர்களுக்கு இருக்கவேண்டும்.

**தாங்களாகவே திருப்பிக் கொடுப்பது:** எதிர்காலத்தில் இவ்விதம் "தாங்களாகவே திருப்பிக்கொடுப்பது" என்ற பழக்கத்தை கைவிடுமாறு செய்வதற்காக சட்டத்தில் ஒரு விதியை ஏற்படுத்த வேண்டும் என்று கமிட்டி சிபார்சு செய்துள்ளது; அதாவது ஒரு பரிபூரணமான சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பு, எந்த வார, குத்தகைதாரும் நிலத்தைத் திருப்பிக் கொடுக்கக்கூடாது; எந்த நிலச்சுவான்தாரும் அவ்விதம் பெறக் கொள்ளக்கூடாது என்பதுதான் அவ்விதி. சில பொருளாதார காரணங்களினால் எந்த வார, குத்தகைதாரராவது நிலத்தைச் சாகுபடி செய்ய முடியாவிடில், அந்நிலத்தை அவர் அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டும்; அரசாங்கம் வேறு ஒரு வார, குத்தகைதாரருக்கு அந்நிலத்தைக் கொடுக்கவேண்டும்.

68274

**திருப்பிக் கொடுத்தல்:** வெளியேற்றப்பட்ட வார, குத்தகைதாரர்களுக்கு எவ்விதத் தடையுமின்றி அந்நிலம் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டுமென சிபார்சு செய்யப்படுகிறது. ஒரு புதிய வார, குத்தகைதாரருக்கு அந்த நிலம் கொடுக்கப்பட்டிருந்தால், பழைய வார, குத்தகைதாரருக்கே அது திரும்பவும் கொடுக்கப்படவேண்டுமென்று வற்

புறுத்த வேண்டியதில்லை; ஆனால், அந்தப் புதிய வார குத்தகைதார் நல்லெண்ணத்தோடு அனுமதிக்கப்பட்டவராக இருக்கவேண்டும்: சட்டத்தின் விதிகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, நிலச் சுவான்தார், அந்நிலத்தைத் தன் உறவினருக்கோ, நண்பருக்கோ தன்னைச் சார்ந்திருப்பவருக்கோ கொடுத்திருந்தால், அப்படி அந்நிலத்தை வாங்கியவரை, உண்மையான வார, குத்தகைதாரராகக் கருதக் கூடாது இந்தப் புதிய வார, குத்தகைதார் உண்மையானவராகவேயிருந்து, ஒரு குடும்ப அளவிற்கு மேற்பட்ட நிலத்தைப் பெற்றிருந்தாரேயானால், அப்படி ஒரு குடும்ப அளவுக்குமேலிருக்கும் பகுதியானது ஏற்கனவே வெளியேற்றப்பட்ட வார, குத்தகைதாரருக்குக் கொடுக்கப்படவேண்டும்.

# நில உடைமை அளவுபற்றிய பரிசீலனைக் குழுவின் முடிவுகளும் சிபாரிசுகளும்

## 1. நில உடைமைக்கு உயர்ந்தபட்ச வரம்புகட்டும் கோட்பாட்டிற்கு அங்கீகாரம்

நில உடைமையிலும், விவசாய வருமானத்திலும் இருக்கக்கூடிய மிகப் பெரிய ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கவேண்டியது சமூக நீதிக்கு உட்பட்ட விஷயமாகும். ஒரு தனி நபர் வைத்துக்கொள்ள வேண்டிய நிலத்தின் உயர்ந்தபட்ச அளவிற்கு ஒரு பூரணமான எல்லையை நிர்ணயிப்பது அவசியமாகும். விவசாயத் துறையிலே உயர்ந்தபட்ச நில உடைமைக்கு வரம்புகட்டும் கோட்பாடு அனுஷ்டிக்கப்படுவது பல காரணங்களைக்கொண்டு நியாயப்படுத்த முடியும்; எனினும் பொருளாதாரத்தின் இதர துறைகளிலும், அத்துறைகளிலே நிலவக்கூடிய நிலைமைகளுக்கு உகந்தாற்போன்று, அத்தகைய வரம்பு கட்டும் கோட்பாடு அங்கீகரிக்கப்பட்டு, அறிவிக்கப்படுமானால் நில உடைமைக்கு உயர்ந்தபட்ச வரம்பு கட்டுவதற்கு உள்ள எதிர்ப்புக் குறையும்; இது வெற்றியடைவதற்கு பெரும் வாய்ப்புகள் ஏற்படும்.

## 2. வரம்பைப் புகுத்துவதற்கான விஸ்தீரணம்

நில நிர்வாகத்தைப் போன்று நிலஉடமைக்கும் குடும்பம்தான் உண்மையான இயக்கும் யூனிட்டாகும். எனவே, உயர்ந்தபட்ச வரம்பை நிர்ணயிக்கும் காலத்தில் ஒரு குடும்பத்தின் அங்கத்தினர்கள் அனைவரும் வைத்திருக்கக்கூடிய நில விஸ்தீரணத்தைக் கணக்கிலெடுத்துக்கொள்ளவேண்டும். இந்நோக்கத்திற்காக குடும்பம் என்பது கணவன், மனைவி, அவர்களைச் சார்ந்திருக்கக்கூடிய ஆண்'பெண் குழந்தைகள், பேரப்பிள்ளைகள் ஆகியோரைக் கொண்டிருப்பதாகக் கொள்ளவேண்டும்.

சொந்த சாகுபடி செய்துகொண்டிருக்கக்கூடிய சொந்த நிலத்திற்கு வரம்பை நிர்ணயிக்கவேண்டும். சொந்த நிலம் என்பது சாசுவதமான, பிதுரார்ஜித உரிமைகளுடன் வைத்திருக்கப்படும் நிலமாகும்.

நில உடைமைக்கு உயர்ந்தபட்ச வரம்பு நிர்ணயிக்கப்படும் என எதிர்பார்த்து பெரும் நிலப்பரப்புகளை உடையவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு தங்கள் உடைமைகளைக் கொண்டுவருவதற்காகப் போலித்தனமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளனர்; எனவே, மிஞ்சியுள்ள நிலத்தைப்பற்றி நிர்ணயிக்கும் காலத்தில் ஒரு குறிப்பிட்ட தேதிக்குப்பின்பு ஏற்படுத்தப்பட்ட மாற்றமோ குத்தகையோ நிராகரிக்கப்படவேண்டும். ஒவ்வொரு ராஜ்யமும் அங்குள்ள நிலைமைகளுக்குத் தகுந்தாற்போல் இந்தத் தேதியை நிர்ணயித்துக்கொள்ளலாம்.

## 3. வரம்பின் அளவு

ஐந்து அங்கத்தினர்களுக்கு மேற்போகாமலுள்ள சராசரி குடும்பத்திற்கு வேண்டிய நிலத்தின் அளவை மூன்று குடும்ப உடைமைகள் என்று நிர்ணயிக்கலாம். மேற்கொண்டு இருக்கக்கூடிய ஒவ்வொரு அங்கத்தினருக்கும் அதிகப்படியான ஒரு குடும்ப அளவை அனுமதிக்கலாம்; ஆனால் உயர்ந்தபட்சம் ஆறு குடும்ப அளவிற்குமேல் அது போகக்கூடாது.

ஒரு குடும்ப அளவு என்பது வருடத்திற்கு சராசரி 1600 ரூபாயை மொத்த வருமானமாகக் கொடுக்கக்கூடிய நிலமென்றோ அல்லது குடும்ப உழைப்புக்கான கூலியும் தவிர இதர செலவுகள் போக மீதமுள்ள வருமானமாக 1200 ரூபாயைக் கொடுக்கக்கூடிய நிலமென்றோ நிர்ணயிக்கலாம்; இது ஒரு ஏர்க்கால் யூனிட்டுக்கோ அல்லது அதற்கு வேண்டிய விஸ்திரணத்திற்கோ குறைவானதாக இருக்கக்கூடாது.

## 4. மிஞ்சிய நிலத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்வதும் அதற்கு நஷ்டஈடு கொடுப்பதும்பற்றி

மிஞ்சி இருக்கக்கூடிய நிலம் அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப்படவேண்டும். நஷ்டஈடு அளவானது எக்காரணத்தை முன்னிட்டும் மார்க்கெட் மதிப்பில் 25 சதவிகிதத்திற்கு அதிகமாகப் போகக்கூடாது; இருபது வருடங்களில் ஏற்படக்கூடிய நிலவரியின் மொத்த அதிகரிப்பிற்கு (வட்டி உள்பட உள்ள தொகையானது) மேல் போகக்கூடாது. ஜமீந்தாரி ஒழிப்பின்பொழுது கொடுக்கப்பட்டதைப் போன்று நஷ்டஈட்டின் மொத்த அளவிற்குத் தகுந்தமாதிரி, நஷ்டஈட்டின் விகிதம் இருக்கலாம் என்ற பிரச்னையைப் பரிசீலித்துக் கொள்ளலாம்.



நஷ்டஈடானது இருபது வருடங்களில் திரும்பப் பெறக்கூடிய அரசாங்கப் பத்திரங்களின்மூலம் கொடுக்கப்படலாம். மிஞ்சிய நிலமானது விநியோகிக்கப்பட்டவுடனே அதை வாங்கியவர்கள் அரசாங்கத்தின் கீழுள்ள குத்தகைதாரர்களாக மாறிவிடுவார்கள். நிலச்சுவான்தார்களுக்கு நஷ்டஈட்டுத் தொகையை அரசாங்கம் கொடுப்பதற்குத் தேவையுள்ள காலம்வரைக்கும் இந்தக் குத்தகைதாரர்கள் அரசாங்கத்திற்கு நியாயமான வாரத்தை செலுத்தவேண்டும். இந்தக் காலம் முடிந்தவுடனே, அக்குத்தகைதாரர் பூரண உரிமையுள்ள சொந்தக்காரரென அறிவிக்கப்படவேண்டும்; அதற்குப் பின்பு அப்பொழுதுள்ள நிலவரியை மட்டும்தான் அவர் கொடுக்க வேண்டும்.

## 5. விதிவிலக்குகள்

கீழ்க்கண்ட இனங்களைச் சேர்ந்த பண்ணைகளுக்கு, வரம்பு கட்டுவதிலிருந்து விதிவிலக்கு அளிக்கலாம்:

(1) காபி, டீ, ரப்பர் தோட்டங்கள் ஆகியவை பண்ணைகளின் தன்மைகளையும், இயந்திரத் தொழில்களின் தன்மைகளையும் ஒன்றாகக் கொண்டுள்ள தொழில்களாகும். எனவே, இத் தோட்டங்களுக்கு உயர்ந்தபட்ச வரம்பு நிர்ணயிப்பது ஒரு சரியான சீர்திருத்த நடவடிக்கை ஆகாது. அரசாங்கமே அவற்றை எடுத்துக்கொண்டு, பின்பு அவற்றைக் கூட்டுறவு நிர்வாகத்தில் கொண்டு வருவதுபற்றி பரிசீலிக்கலாம்.

சில தோட்டங்களில் பெரும் பகுதி பிரதேசம் பருவகாலப் பயிர்களை பயிர் செய்வதற்காகக் குத்தகைதாரர்களுக்குக் குத்தகைக்கு விடப்படுகிறது. அத்தகைய நிலங்களில் உள்ள குத்தகைதாரர்களின் உரிமைகள், வரம்பு கட்டுவது ஆகியவைபற்றி தோட்டங்களின் பரிசீலனைக் கமிஷன் கொடுத்துள்ள சிபார்சுகளின் வெளிச்சத்தில் பரிசீலனை செய்யவேண்டும்.

(2) பழத் தோட்டங்கள்: இப்பொழுது இருக்கக்கூடிய பழத் தோட்டங்கள் ஒரு குறிப்பிட்ட அளவு நெருக்கமாக இருக்கக்கூடிய நிலப் பரப்பிற்குள்ளே இருக்குமேயானால் அதைப் பங்கு போடக்கூடாது. ஆனால், ஒருவரின் நிலத்திற்கு வரம்பு நிர்ணயிப்பதற்காக அவர் வைத்துக் கொள்ளக்கூடிய நிலப்பரப்பைக் கணக்கிடும் பொழுது பழத்தோட்டங்கள் இருக்கக்கூடிய நிலத்தையும் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும். எங்கெல்லாம் இந்தப் பழத்தோட்டங்கள் அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப் படுகின்றனவோ அங்கெல்லாம்

அத் தோட்டங்கள் பாழ்படுத்தப்படாமல் பழத் தோட்டங்களாகவே இருப்பதை உறுதி செய்தாகவேண்டும்.

(3) விசேஷப் பண்ணைகள் (கால்நடை வளர்ப்புப்பண்ணை, பால் பண்ணை, கம்பளி தயாரிக்கும் பண்ணை போன்றவை): அரசாங்கத்தால் இத்தகைய விசேஷப் பண்ணைகள் என்று உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளவைகளுக்கு விதிவிலக்கு அளிக்கலாம்.

(4) ஒரு குறிப்பிட்ட பிளாக்குகளாக இருக்கக்கூடிய மிகத் திறமையுடன் நிர்வகிக்கப்படும் பண்ணைகளுக்கு மிகப்பெரிய மூலதனமும் நிரந்தரமான அபிவிருத்திகளும் தேவையாக இருக்கின்றன; இத்தகைய பண்ணைகளுக்கு விதிவிலக்கு அளிக்கலாம். திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டபின் இப்பண்ணைகளுக்கு விசேஷப் பொறுப்புகளும் கடமைகளும் இருக்கவேண்டும்.

## 6. மிஞ்சிய நில விநியோகம்

நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட குத்தகைதாரர்களுக்கு இதில் முதலிடம் கொடுக்க வேண்டும். அதற்குப் பின்பு வரவேண்டிய வரிசை பற்றி, கீழ்க்கண்ட பல்வேறுவிதக் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன:

(i) வெளியேற்றப்பட்ட குத்தகைதாரர்கள்; பண்ணையாட்கள்; குறைந்தபட்ச நிலவுடைமைகூட இல்லாத விவசாயிகள்;

(ii) வெளியேற்றப்பட்ட குத்தகைதாரர்கள்; பண்ணையாட்கள்; இதர விவசாயத் தொழிலாளிகள்;

(iii) வெளியேற்றப்பட்ட விவசாயிகள்; பண்ணையாட்கள்; குறைந்தபட்ச நிலவுடைமைகூட இல்லாத விவசாயிகள்; இதர விவசாயத் தொழிலாளிகள் ஆகியோர் சமமாகப் பங்கிட்டுக்கொள்வது;

(iv) வெளியேற்றப்பட்ட குத்தகைதாரர்கள்; இதர வகையைச் சேர்ந்த அனைவரும் சமமாகப் பங்கிட்டுக்கொள்வது.

## 7. குறைந்தபட்ச நில உடமை (Floor)

குறைந்தபட்ச நிலவுடைமைக்குக் குறைவாக நிலம் வைத்திருப்பவர்களின் நிலத்தை யெல்லாம், கூட்டுறவுத் துறையென்று கூறப்படுகின்ற ஒரு நெருக்கமான பிளாக்காக ஒன்று சேர்த்தாலொழிய, குறைந்தபட்ச நிலவுடைமைக்கு வரம்புகட்டுவதற்கு அர்த்தமில்லை. பல்வேறு மட்டங்களிலே கூட்டுறவைக் கொண்டுவர முடியும்; இதில்



பங்குகொள்பவர்கள் தயாராக இருப்பதைப் பொறுத்து, கடன் கொடுப்பது, பண்டங்களை விற்பதுமுதல் கூட்டாகச் சாகுபடி செய்வதுவரை கூட்டுறவு முறையை அனுஷ்டிக்க முடியும். இந்தத் துறையில் சேர்வதற்கு ஊக்கமளிப்பதற்காக, அதிகபட்ச வரம்பு கட்டியபின் மிஞ்சியிருக்கக்கூடிய நிலத்தை இக் கூட்டுறவுத் துறைக்கு மாற்றலாம். வெளியேற்றப்பட்ட குத்தகைதாரர்கள், பண்ணையாட்கள், நிலமில்லாதவர்கள் (இவர்கள் விரும்பினால்) இந்தத் துறையில் சேர்த்துக்கொள்ளப்படலாம். உயர்ந்தபட்ச—குறைந்தபட்ச நிலவுடைமைக்கு வரம்புகட்டும் கொள்கையின் ஒரு பகுதியாக, செலவைக் குறைக்கக்கூடிய முறையில் நிலவுடைமைகளை ஒன்றுபடுத்தும் ஒரு திட்டம் புகுத்தப்பட்டால்தான், மேற்குறிப்பிட்ட புனரமைப்பும், சாதனையும் சாத்தியமாகும்.

நிர்ணயிக்கப்படவேண்டிய நில உடமையின் குறைந்தபட்ச அளவானது ஒரு குடும்ப அளவில் மூன்றில் ஒரு பங்காக இருக்க வேண்டுமென கமிட்டியின் உறுப்பினர்களில் சிலர் சிபாரிசு செய்தனர்; மற்றும் சிலர் அது சரிபாதி குடும்ப அளவாக இருக்க வேண்டுமென்றனர்; இரண்டு அங்கத்தினர்கள், குறைந்தபட்ச நில உடமை அளவும், லாபகரமான சாகுபடிக்குப் போதுமான அளவு என்று கருதப்படுவதும் ஒன்றாக இருக்கவேண்டுமென அபிப்பிராயம் தெரிவித்தனர். குறைந்தபட்ச அளவை நிர்ணயிப்பதானது மேற்குறிப்பிட்ட ஒரு புனரமைப்பில் கொண்டுவிட வேண்டுமானால், கூட்டுறவுத் துறையை நடத்துவதற்குள்ள அரசாங்கத்தின் திறன்தான் இவ்விஷயத்தில் பலனுள்ள ஒரு அளவாகும்.

# புனரமைப்புபற்றி கமிட்டியின் சிபாரிசுகள்

1. உயர்ந்தபட்ச அளவுக்கு வரம்புகட்டிய பின்பு, அரசாங்கம் எடுத்துக்கொள்ளவிருக்கும் மிஞ்சிய நிலமும் துண்டுதுக்காணிகளாக விநியோகிக்கப்படக்கூடாது. இந்நிலங்களை வாங்குபவர்களுக்குத் தனிச் சொத்துரிமை உணர்ச்சியோ, அந்தக் குறிப்பிட்ட நிலத்தின் மீது பற்றுதலோ இருக்கமுடியாது; எனவே அவர்களைக் கூட்டுப் பண்ணைமூலம் விவசாயம் செய்யுமாறு செய்வது சுலபமாகும். ஆகையால் அத்தகைய நிலங்களைக் கூட்டுறவுப் பண்ணைகளாக விவசாயம் செய்வதற்குக் கொடுக்கவேண்டும். இந்தக் கூட்டுறவுப் பண்ணைகள் கீழ்க்கண்ட முறைகளில் இருக்கலாம்.

(அ) நிலமில்லாதவர்கள் ஒரு கூட்டுறவு ஸ்தாபனமாகச் சேர்ந்துகொள்ளலாம்; அவர்கள் அந்த கூட்டுறவு ஸ்தாபனத்தின் குத்தகைதாரர்கள் ஆவர். இவை குத்தகைதாரர்களின் கூட்டுறவு ஸ்தாபனங்களாகும்.

(ஆ) நிலமில்லாதவர்கள் ஒரு கூட்டுறவு ஸ்தாபனத்தை உண்டாக்கலாம். கருவிகள், மூலதனம் ஆகியவை கூட்டாக வைத்துக்கொள்ளப்படும்; பெரிய அளவிலே நடத்தப்பட வேண்டிய வேலைகளெல்லாம் கூட்டாகச் செய்யப்படும், ஆனால் நேரடியான கவனம் செலுத்தப்படுவதற்கும், கடுமையாக உழைப்பதற்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு குறிப்பிட்ட அளவு ஒதுக்கப்படும்—இந்த அளவு குடும்ப அளவா அல்லது அடிப்படை அளவா என்பது முடிவு செய்யப்படவில்லை. இந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்களிலிருந்து அவர்களுக்குரிய பங்கையும், போனஸையும் பெறுவார்கள்.

(இ) கூட்டுப் பண்ணைகள், இம்மூன்று வகைகளில் மூன்றாவது வகை விரும்பப்படவில்லை, மற்ற இரண்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2. நில உடமைகளைக் கட்டாயமாக ஒன்றுபடுத்த முயற்சிக்க வேண்டும்; நிலம் சிதறுண்டுபோவது தடுக்கப்பட வேண்டும்.

3. நில உடமைகளை ஒன்றுபடுத்தும் காலத்தில், அடிப்படை நில உடமைக்குக் கீழாக உள்ள சிறிய நில உடமைகளையெல்லாம், கூட்டுறவுப் பண்ணைகளுக்கு அருகில் கொண்டுவர வேண்டும்; இதன் மூலம் சிறிய நிலங்களை வைத்திருப்பவர்கள் தாங்களாகவே எந்த சமயத்திலாவது கூட்டுறவு ஸ்தாபனத்தில் சேருவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

4. நிலவிநியோகம் முடிந்தபின்பு மூன்றுவிதமான பண்ணைகளிருக்கும்—கூட்டுறவுப் பண்ணைகள்; கணிசமான அளவு நிலமுள்ள பண்ணைகள், அதாவது குடும்ப அளவுக்கு மேலிருக்கக்கூடிய ஆனால் உயர்ந்தபட்ச அளவுக்கு உட்பட்ட நிலங்களையுடைய பண்ணைகள்; ஒரு குடும்ப அளவுக்குக் குறைவான நிலத்தையுடைய பண்ணைகள் ஆகியவையே. அவை மூன்றும், சிறந்த, திறமையான விவசாயம் செய்யப்படுவதற்கு, சாகுபடியின் தரங்களை நிர்ணயிக்க வேண்டும். ஆனால் இந்தத் தரங்கள் பாதுகாக்கப்படுவதும், அவை மேலும் அபிவிருத்தி செய்யப்படுவதும், கடன்கள், உரம் நீர்ப்பாசனம் போன்றவற்றின் மூலம் அரசாங்கம் கொடுக்கும் உதவியைப் பொறுத்திருக்கிறது.

5. அநேகமாக ஒவ்வொரு கிராமத்திற்கும், கிராமப் பஞ்சாயத்துக்களும், நியாயாளிக்கும் பஞ்சாயத்துக்களும் ஏற்படுத்தப்பட வேண்டும். நிலச்சீர்திருத்தங்களை அமுலாக்கி, நில சம்பந்தமான தஸ்தாவேஜுகளைத் தயாரித்து வைத்திருக்கும் பொறுப்பு கிராமப் பஞ்சாயத்துகளுக்கு இருக்க வேண்டும். நிலத்தகராறுகளை முதலில் கேட்டு, முடிவுசெய்யும் பொறுப்பு நியாயமளிக்கும் பஞ்சாயத்துக்களுக்கு இருக்க வேண்டும். கிராமப் பஞ்சாயத்துக்கள் 'ஏ' 'பி' 'ஸி' என்ற மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம்; ஒவ்வொரு பிரிவுக்கும் பல்வேறு விதமான அதிகாரங்கள் கொடுக்கப்படலாம்.

6. எங்கெல்லாம் கிராமப் பஞ்சாயத்துக்களில் வார, குத்தகைதாரர்களுக்கும், விவசாயத் தொழிலாளிகளுக்கும் பிரதிநிதித்துவம் இல்லையோ, அங்கெல்லாம் இந்தப் பகுதிகளின் பிரதிநிதிகள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். இவ்விஷயத்தில் நியமனம் கூடாது.

68274

7. மேற்கூறிய பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக நிலவரியில் 20 சதவிகிதம் பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும்; கிராம மக்கள் தங்களுக்குள்ளே, நிலவரியில் 20 சதவிகிதத்திற்குச் சமமான தொகையைச் சேகரித்தால், மேலும் நிலவரியில் 20 சதவிகிதத்தை அவர்களுக்குக் கொடுக்கலாம்.